# இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டோரை இலங்கைக்கு அனுப்பக்கோரி தமிழக முதல்வருக்குக் கடிதம்

## தமிழரசு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அனுப்பினார்



மறைந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைவழக்கில் கைதுசெய்யப்பட்டு, 32 வருட சிறைத்தண்டனையின் பின் கடந்த 2022.11.11 அன்று இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட இலங்கையர்களான சாந்தன், முருகன், ரொபேட்பயஸ், ஜெயக்குமார் ஆகிய நால்வரையும் இலங்கைக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இதுதொடர்பில் சாந்தனின் தாயாரால் தனக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக் கடிதத்தை மேற்கோள் காட்டி அவரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில்,

32 ஆண்டுகால சிறைத்தண்டனையின் பின்னர் உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ள நிலையில், அவ்வழக்கிலிருந்து விடுதலையான இலங்கைப் பிரஜைகளான சாந்தன், முருகன், ரொபேட்பயஸ், ஜெயக்குமார் ஆகிய நால்வரையும் இலங்கைக்கு வரவழைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட எந்த முயற்சிகளும் பலனளிக்காததால் இன்றுவரை அவர்கள் நால்வரும் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை தாங்கள் கரிசனையோடு அணுகுவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 15 திங்கட்கிழமை 29.01.2024 கதிர் 167




# பாடசாலை மின்சாரக் கட்டணமும் பெற்றோர் மீது திணிப்பு மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டமொன்று நடத்தப்படும்!

## ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின்



ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பளத்தில் 20,000 ரூபா அதிகரிப்பு மற்றும் பாடசாலை மாணவர்களின் பெற்றோருக்கு தேவையில்லாமல் கல்விச் செலவுச் சுமை உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வை வழங்காத காரணத்தினால் அடுத்த பாடசாலைத் தவணை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பெற்றோருடன் இணைந்து மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டமொன்று நடத்தப்படும், என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பாடாசாலைகளில் மின்சார கட்டணத்தை

2 ➤

# இலங்கைக்கு மேலும் பல நிபந்தனைகளை விதித்துள்ள சர்வதேச நாணய நிதியம்?

இலங்கைக்கு வழங்கவுள்ள இரண்டாம் தவணைக் கடன் தொகைக்காக சர்வதேச நாணய நிதியம், மேலும் 75 புதிய நிபந்தனைகளை விதித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் முதலாம் தவணைக் கடன் தொகை வழங்கப்பட்ட போது, இலங்கை அரசாங்கத்திடம் 73 நிபந்தனைகள் அவர்களால் முன்வைக்கப்பட்டிருந்தன.

கடந்த 2023ஆம் ஆண்டின் நவம்பர் மாத இறுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய குறித்த 73 நிபந்தனைகளில் 60 நிபந்தனை அரசாங்கம் இதுவரை நிறைவேற்றியுள்ளது.

எஞ்சிய நிறைவேற்றப்படாத 13 நிபந்தனைகளில் 8 நிபந்தனைகளை பூர்த்தி செய்யும்

2 ➤



# யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக காளிங்க ஜெயசிங்க இன்று பதவியேற்றார்

யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக காளிங்க ஜெயசிங்க இன்று பதவியேற்றார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் அவர் தனது கடமைகளை பொறுப்பேற்றபோது, சிரேஷ்ட பொலிஸ்

2 ➤

# தமிழரசுக் கட்சிப் பதவிகளில் மாற்றமில்லை முடிவெடுக்க சிறிது காலம் தேவைப்படுகிறது!

## திருமலையில் சிறிதரன் எம்.பி தெரிவிப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தில் கட்சி நிர்வாகிகள் தெரிவு தொடர்பாக அறிவிக்கப்பட்ட முடிவுகளை அப்படியே நடைமுறையாக்காது பேணவும், இறுதித் தீர்மானங்களை எடுப்பதைத் தள்ளிப் போடவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறிதரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று மாவை சேனாதிராஜாவின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

2 ➤



# சோமாலிய கடற்கொள்ளையர்களின் பிடியில் உள்ள இலங்கை மீனவர்களை விடுவிக்கப் பேச்சுவார்த்தை

சோமாலிய கடற்கொள்ளையர்களின் பிடியில் உள்ள லொரென்சோ சோன் 4 கப்பலின் மீனவர்களை பாதுகாப்பாக விடுவிக்க சோமாலிய கடற்படையினருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக கென்யாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

எத்தியோப்பியாவிலுள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளுடன் இணைந்து, சோமாலியாவின் கடற்படைத் தளபதி அட்மிரல் அப்திவர்சமே ஒஸ்மானுடன் தொடர்பு கொண்டு பணியாற்றி வருவதாக கென்யாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் வி.கண்ணநாதன் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கடற்படை கூட்டு நடவடிக்கை மையத்தின் ஊடாக இலங்கையர்களை பாதுகாப்பாக மீட்க முடியும் என சோமாலிய கடற்படைத் தளபதி கூறியதாகவும் கென்ய உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிட்டுள்ளது.

கடத்தப்பட்ட இலங்கை மீனவர்களை விரைவில் விடுவிக்க சோமாலிய அரசு உறுதி பூண்டுள்ளதாக கென்யாவிற்கான இலங்கை

2 ➤

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக தகவல்களை பெற்றுக்கொள்ள புதிய செயலி

## கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் அறிமுகம்

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக தகவல்களை பெற்றுக்கொள்ளும் வகையில் புதிய செயலி ஒன்று இன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அனைத்துத் தரப்பினருக்கும் தேவையான தகவல்களை இலகுவாகவும், விரைவாகவும் பெற்றுக்கொள்ளக் கூடியவகையில் வடிவமைக்கப்பட்ட குறித்த செயலி, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரனால் இன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

மாவட்டச்செயலக தகவல்தொடர்பாடல் தொழிநுட்பக் கிளையின் ஒழுங்குபடுத்தலில், மேலதிக அரசாங்க அதிபர் எஸ். முரளிதரனின் வழிகாட்டலில், மாவட்ட விதாதா உத்தியோகத்தர் த.முரளிதரனினால் குறித்த செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்களங்களின்

2 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# நாட்டில் 10 லட்சம் பேர் தொழில்களை இழந்துள்ளனர்! ஐக்கிய தொழில் முனைவோர் சங்கத்தின் தலைவர்

நாட்டிற்கு வருமானம் ஈட்டித்தரும் சிறு தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் இதுவரையில் சுமார் ஒரு மில்லியன் பேர் சம்பந்தப்பட்ட வர்த்தகத் துறைகளில் தொழில் இழந்துள்ளனர், என இலங்கை ஐக்கிய தொழில் முனைவோர் சங்கத்தின் தலைவர் டானியா அபேசுந்தர தெரிவித்துள்ளார்.

சிறு தொழில் முனைவோர் பொருளாதார நெருக்கடியில் உள்ள நிலையில், அரசின் செலவினங்களைக் குறைக்க தெளிவான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை, எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்று நாட்டில் வர்த்தகர்கள் மற்றும் மக்களின் வாழ்வுரிமை மீறப்பட்டிருப்பதையே அண்மைக்கால சம்பவங்கள் காட்டுகின்றன. பாரிய வர்த்தகர்களும் நாட்டை ஆள்கின்றவர்களும் மகிழ்ச்சியாக இருக்கும் அதேவேளை, ஆட்சியாளர்களை அதிகாரத்தில் அமர்த்துவதற்கு கடுமையாக உழைத்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டைப் பராமரிக்கும் சிறு வர்த்தகர்கள் முன்னேற்றம் கண்டால் மாத்திரமே நாட்டின் வருமானத்தை அதிகரிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெத-63)

# கிராம சேவகர் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகின

கிராம சேவகர் பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சைத் திணைக்களத்தினால் கடந்த 27ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளன.

பிரதேச செயலகப் பிரிவுகளின்படி நேர்முக பரீட்சைக்கு தகுதி பெற்ற 4,232 பேரின் பட்டியல் வெளியிடப்படவுள்ளதாகவும், வெளிவிவகார அமைச்சின் www.moha.gov.lk என்ற உத்தியோகப்பூர்வ இணையதளத்தில் குறித்த பெயர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது எனவும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் 2002 கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளதாகவும், வர்த்தமானி அறிவித்தலுக்கமைய நேர்முகப் பரீட்சைகள் விரைவில் நடத்தப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிராம சேவகர்களுக்கான மேற்படி பரீட்சைகள் கடந்த 2023 ஆம் வருடம் டிசம்பர் 02 ஆம் திகதி பரீட்சை திணைக்களத்தால் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரெத-64)

## தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ....

மாவட்ட இணைப்பாளர்களுடனான கலந்துரையாடலின் நிறைவில் குறித்த புதிய செயலி இன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இதனூடாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்துடன் தொடர்புடைய தகவல்கள் உள்ளிட்ட தேவையான பல தரவுகளை இந்த புதிய செயலியின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர்(காணி), பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், மாவட்ட விவசாய பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர் உள்ளிட்ட பதவி நிலை உத்தியோகத்தர்கள், கிளைத் தலைவர்கள், திணைக்களங்களின் மாவட்ட இணைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (02)

## சோமாலிய கடற்கொள்ளையர்களின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இலங்கை கடற்படையினரை மீட்க உதவுமாறு பல இலங்கைத் தூதுவர்கள் சோமாலிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். கப்பலை மீட்க இலங்கை கடற்படையினருடன் மத்தியஸ்தம் செய்யுமாறு ஆபிரிக்க பிராந்தியத்தில் உள்ள இலங்கை தூதுவர்கள் கோரியுள்ளனர்.

இதனிடையே, சோமாலிய கடற்கொள்ளையர்களால் சிறைபிடிக்கப்பட்ட மீன்பிடி கப்பல் குறித்து விசாரணை நடத்துமாறு பஹ்ரைனில் உள்ள கூட்டு கடல் படைக்கு இலங்கை கடற்படை அறிவித்துள்ளது.

39 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட பஹ்ரைனின் கூட்டு கடல்சார் படை, கடற்படைக் கப்பல்களின் பாதுகாப்பைக் கையாளும் ஓர் அமைப்பாகும்.

மேலும், சக்திவாய்ந்த கடற்படை தொழில்நுட்பம் கொண்ட நாடுகளுக்கும் இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

கடந்த 12ஆம் திகதி திக்விட்ட துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட லொரென்சோ சோன் 4 என்ற கப்பலை சோமாலிய கடற்கொள்ளையர்கள் கைப்பற்றியுள்ளதாகவும், சீஷெல்ஸ் அருகே சர்வதேச கடல் பகுதியில் அந்தக் கப்பல் உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அக்கப்பலில் 6 இலங்கை மீனவர்கள் சிக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

## தமிழரசுக் கட்சிப் பதவிகளில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“கட்சியின் தலைமைப் பொறுப்பை நான் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. கட்சித் தலைவராக மாவை சேனாதிராஜாவே தொடர்கின்றார்.

இரண்டு தரப்புகளுக்கு இடையிலும் கொதிநிலை நிலவுகின்றது. ‘வெட்டு ஒன்று துண்டு இரண்டாக’ முடிவு எடுக்க முடியாத நிலைமை உள்ளது. எல்லோரையும் சமாளித்து, அரவணைத்து, ஓர் இணக்கமான முடிவைக் காண வேண்டி இருப்பதால் சம்பந்தப்பட்ட தரப்புகளோடு நான் நேரடியாகப் பேசவிருக்கின்றேன். அதற்காக சற்றுக் காலம் இந்த விடயத்தில் முடிவெடுப்பதைத் தள்ளிப் போடத் தீர்மானித்துள்ளோம்.

பொதுச்செயலாளர் பதவி விடயத்தில்தான் இழுபறி நீடிக்கின்றது. அதுவும், திருகோணமலை - மட்டக்களப்புத் தரப்புகளுக்கு இடையிலான சிக்கலாக அது உள்ளது. இருதரப்புகளும் விட்டுக் கொடுத்து, பொதுச்செயலாளர் பதவியைக் கால அளவீட்டில் பங்கிட்டு, ஏதேனும் இணக்கத்திற்கு வர முடியுமா? என்றும் பார்க்கின்றோம்.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண எங்களுக்குச் சற்று கால அவவாசம் தேவைப்படுகின்றது. மாவை சேனாதிராஜா அடுத்து வரும் நாள்களில் சிங்கப்பூர் செல்கின்றார். அவர் பெப்ரவரி 10ஆம் திகதிக்குப் பின்னர் நாடு திரும்புவார்.

அதன் பின்னர் இப்பிரச்சினை பற்றி ஆராய்ந்து ஒரு முடிவெடுப்போம். அதுவரை தற்போது உள்ள நிலைமை அப்படியே தொடரும்“, என சிறிதரன் எம்.பி கூறியிருக்கிறார். (04)

## யாழ் மாவட்ட பிரதிப் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் அந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதுவரை காலமும் பிரதிப் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய மஞ்சுள செனரத் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

## இலங்கைக்கு மேலும் பல .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் 5 நிபந்தனைகள் கடுமையான நிபந்தனைகள் என்பதால் அவற்றை நிறைவேற்ற கால அவகாசம் தேவைப்படுவதாக அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் அதற்கு IMF இணக்கம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை மின்சாரக் கட்டணமும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தும் சுமையையும் அரசாங்கம் மறைமுகமாக அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக பெற்றோர்கள் மீது திணித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஆசிரியர் மற்றும் அதிபர்மாரின் சம்பளத்தை 20,000 ரூபாவினால் அதிகரிக்குமாறு அரசாங்கத்திடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் அதற்கு அரசாங் கம் இதுவரை செவிசாய்க்காமல் தன்னிச்சையாக செயல்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களின் பாடப் புத்தகங்கள், காலணிகள், கற்றல் உபகரணங்கள் ஆகியவற்றின் விலைகள் தாங்க முடியாத அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ள நிலையில், பாடசாலைகளின் மின்சாரக் கட்டணத்தையும் செலுத்துமாறு பெற்றோர்கள் மீது அரசாங்கம் மறைமுகமாக சுமைகளை சுமத்துவது மிகவும் அநீதியானது. எனவேதான், பெற்றோருடன் இணைந்து மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டமொன்றை நடத்தவுள்ளோம், என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெத-60)

## இந்திய உச்ச நீதிமன்றத்தால் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது இளமைக்காலம் முழுவதையும் சிறையில் கழித்து, முதுமைக்காலத்தில் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய சிறுநீரகப் பாதிப்பு, கல்லீரல் பாதிப்பு என்பவற்றால் மிகக்கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள சாந்தன், தற்போது சென்னை மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த 33 ஆண்டுகளாகத் தனது மகனைக் காணாது பரிதவித்திருக்கும் சாந்தனின் தாயார், 77 வயது நிரம்பிய தனது முதுமை நிலையில் ஒரு தடவையாவது தனது மகனை நேரில் பார்வையிட வேண்டும் எனவும், அவரை இலங்கைக்கு வரவழைக்க ஆவன செய்யுமாறும் மிக உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றதிலிருந்து ஈழத்தமிழர்கள் விடயத்தில் அதீத கரிசனை கொண்டிருக்கும் தாங்கள், இவ்விடயத்தை மனிதாபிமான அடிப்படையில் அணுகி, நோய்வாய்ப்பட்டிருக்கும் சாந்தனின் உடல்நிலை கருதியும் அவரது குடும்பத்தினரின் உணர்வு நிலைப்பட்ட எதிர்பார்ப்பைக் கருத்திற்கொண்டும் சாந்தன் உள்ளிட்ட நால்வரையும் இலங்கைக்கு அனுப்பிவைக்க ஆவன செய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் - என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (02)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# இறக்காமம் மஸ்ஜிதுல் இக்றாம் பள்ளிவாசலுக்கு நீர்த் தொட்டியும் மோட்டாரும் வழங்கப்பட்டன



(எம்.எம்.ஜெஸ்மின்)

இறக்காமம் மஸ்ஜிதுல் இக்றாம் பள்ளிவாசலுக்கு நீர்த் தொட்டி மற்றும் தண்ணீர் மோட்டார் ஆகியவற்றின் தேவைப்பாடு இருந்து வந்த காரணத்தினால் இவற்றைப் பெற்றுத் தருமாறு பள்ளி நிருவாகிகள், முன்னாள் இறக்காமம் பிரதேச சபை உறுப்பினரான எம்.எல்.முஸ்மி ஊடாக ரஹ்மத் பவுண்டேசனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக வை.எம்.எம்.ஏ.பேரவையின் ஒருங்கிணைப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஸ்தாபகரும், கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூர் அவர்களினால் மிகவும் குறுகிய நாட்களுக்குள் 1000 லீற்றர் நீர்க் கொள்ளளவைக் கொண்ட நீர்த் தொட்டி மற்றும் தண்ணி மோட்டார் என்பன பெற்றுக்கொடுக்கப்பட்டு பள்ளிவாசல் நிருவாகிகளிடம் பாவனைக்காக கையளித்து வைக்கப்பட்டன.

இதன்போது பவுண்டேசன் உறுப்பினர்களுடன் பள்ளித் தலைவர் ஐ.எல்.அனீஸ், ஆலோசகர் வீ.ரீ.ஹஸ்னி, எஸ்.என்.சிறாஜ் மற்றும் ஏனைய பள்ளிவாசல் நிருவாகிகள், ஸலாம் பள்ளித் தலைவர் ஏ.எச்.றபாஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர் ஏ.றியாஸ் , வட்டார உறுப்பினர்களான ஏ.சஜாத், எஸ்.எம்.சியாம், ஏ.எல்.றாயிஸ், எஸ்.எல்.அறூஸ், என்.நிப்றாஸ், வை.பீ. பஹீஜ் உட்பட ஏனைய உறுப்பினர்கள், ஜமாஅத்தினர்கள், மஹல்லாவாசிகள், ஊர் பிரமுகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# தமிழர் பண்பாடுகளை முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்தும் பல்லின சமயக் கலாசார நிகழ்வு



(எம்.எம்.றம்ஸீன்)

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி அமைச்சின் சுற்று நிருபத்தை அடிப்படையாகக் கொண்டு, பல்லின சமய கலாசார நிகழ்வுகளை மாணவர்களின் மத்தியில் அறிமுகப் படுத்தும் எண்ணக்கருவிற்கமைவாக பாடசாலையின் ஆலோசனை வழிகாட்டல் பிரிவினால் பொங்கல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம். றிசாத் அவர்களின் வழிகாட்டலில் நடைபெற்ற நல்லிணக்க பரஸ்பர உறவுகளைப் பேணும் இத்திட்டத்தில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு பொங்கல் நிகழ்வின் தாற்பரியங்கள் பற்றிய தகவல்கள் வழங்கப்பட்டதோடு, இதன் மூலம் மாணவர்களுக்கு மத்தியில் பல்லின சமய கலை, கலாசார பண்புகள் தொடர்பான மனப்பதிவுகளை ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு, தமிழர் பண்பாடுகள் தொடர்பான சிறப்பம்சங்களை உணர்த்தமுடிந்தமை இந்நிகழ்வின் வொற்றியாகும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.




# சமூக ஊடக ஆர்வலர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஆரம்பம்



(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட இளம் சமூக ஊடக ஆர்வலர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஆரம்பமாகியது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலக பிரிவுகளையும் உள்ளடக்கியதாக கப்சோ நிறுவனத்தினால் "Youth Media Project" என்ற வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ் வேலைத்திட்டமானது அம்பாறை மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட 30 சமூக ஊடக ஆர்வலர்களை கொண்டு இவ் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

கப்ஸோ நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் ஏ.ஜே காமில் இம்டாட் தலைமையில் காரைதீவில் நேற்று (28) இப்பயிற்சிப் பட்டறை ஆரம்பமானது .

GCERF> HELVETAS நிதியுதவியுடன் GAFSO நிறுவனத்தின் அமுல்படுத்தலில் செயற்படுத்தப்படும் HOPE OF YOUTH வேலைத்திட்டத்தின் கீழ் Youth Media Project ஆனது இடம் பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வேலைத்திட்டமானது ஒரு வருட காலமாக இடம் பெறவுள்ளது. இதில் முதலாவது விரிவுரையினை ரிப்தி அலி மேற்கொண்டிருந்தார்.

மேலும் சமூக ஊடக ஆர்வலர்களுக்கு "Digital Story Telling " சம்மந்தமான தெளிவும் இதன்போது வழங்கப்பட்டது.

# சம்மாந்துறையில் திருடிய பெறுமதிமிக்க மோட்டார் பைக்கிள் மீட்பு – ஒருவர் கைது



(எஸ்.என்.தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் ஜனவரி மாதம் 14 ஆம் திகதி 8 இலட்சம் ரூபாவுக்கும் மேல் பெறுமதி வாய்ந்த ”டீயதயதிரடளயச ளே 200” என்ற வகையான மோட்டார் சைக்கிள் திருடப்பட்டதாக அதன் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் 16 ஆம் திகதி முறைப்பாடு செய்யதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத்தின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான குழுவினர் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டபோது, அக்கரைப்பற்று பிரதேசத்தில் இருந்து குறித்த மோட்டார் சைக்கிளை நேற்று (28) மீட்டதுடன் திருட்டு சம்பவத்தில் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் திருட்டுக் குற்றச்சாட்டு தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஈரானில் பாகிஸ்தானைச் சேர்ந்த 9 தொழிலாளர்கள் சுட்டுக் கொலை




கடந்த சனிக்கிழமை ஈரானில் 9 பாகிஸ்தான் தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக ஈரான் அரசாங்கச் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஈரானின் சிஸ்தான் - பலுசிஸ்தான் மாகாணம் சிர்கான் நகரில் உள்ள ஒரு வீட்டில் அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் 9 பாகிஸ்தான் தொழிலாளர்கள் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு எந்தவொரு பயங்கரவாத அமைப்போ அல்லது நபரோ உடனடியாகப் பொறுப்பேற்கவில்லை, என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் எல்லையையொட்டி சிஸ்தான் - பலுசிஸ்தான் மாகாணம் உள்ள நிலையில், பாகிஸ்தானியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு அந்த நாடு கண்டனம் தெரிவித்துள்ளது. இந்த நிகழ்வு தொடர்பாக விரிவாக விசாரணை மேற்கொண்டு, குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்று ஈரானிடம் பாகிஸ்தான் வெளியுறவுத் துறை வலியுறுத்தியுள்ளது.

அண்மையில் பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் தாக்குதல் மேற்கொண்ட ஈரான், பயங்கரவாதிகளின் முகாம்கள் மீது அந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவித்தது. அதற்குப் பதிலடி அளிக்கும் வகையில், ஈரானின் சிஸ்தான் - பலுசிஸ்தான் மாகாணத்தில் தானும் பயங்கரவாதிகளின் மறைவிடங்களைக் குறிவைத்து தாக்குவதாகத் தெரிவித்து பாகிஸ்தானும் தாக்குதல் நடத்தியது.

இதனால் பதற்றம் ஏற்பட்ட நிலையில், இரு நாடுகளும் பின்னர் சமாதானம் அடைந்தன. இந்தச் சூழலில், ஈரானில் 9 பாகிஸ்தான் தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (04)

# காலிஸ்தான் பிரிவினைவாதி கொலை விசாரணையில் இந்தியா ஒத்துழைப்பு

## கனடாவின் முன்னாள் அதிகாரி தகவல்

காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜாருடைய கொலை தொடர்பாக நடைபெற்று வரும் விசாரணையில் இந்தியா ஒத்துழைப்பு அளித்து வருகிறது என்றும், இரு தரப்பு உறவில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாகவும் கனடாவின் முன்னாள் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜோடி தாமஸ் தெரிவித்துள்ளார்.

நிஜ்ஜார் கொலை விவகாரத்தில் இந்தியா ஒத்துழைத்து அளித்து வருவது குறித்து கனடாவின் மூத்த அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

இந்தியா பயங்கரவாதியாக அறிவித்த பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார், கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த விவகாரத்தில் இந்தியாவுக்குத் தொடர்பு உள்ளதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றஞ்சாட்டினார். இதை இந்தியா நிராகரித்தது. இதையடுத்து, இரு தரப்பு உறவு பாதிப்படைந்தது.

நிஜ்ஜார் கொலை விசாரணையில் இந்தியா ஒத்துழைப்பு அளிக்கவில்லை என கனடா தெரிவித்து வந்த நிலையில், கொலை தொடர்பான ஆதாரங்களை கனடா அளிக்கவில்லை என இந்தியா கூறி வந்தது.

இந்நிலையில், கனடாவின் பாதுகாப்பு ஆலோசகர் பதவியிலிருந்து வெள்ளிக்கிழமை ஓய்வு பெற்ற ஜோடி தாமஸ், நிஜ்ஜார் கொலை வழக்கில் இந்தியா ஒத்துழைத்து வருவதாக தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இது குறித்துக் கூறிய தாமஸ், 'நிஜ்ஜார் கொலை விசாரணையில் இந்தியா ஒத்துழைக்கவில்லை எனக் கூறவில்லை. இரு நாட்டுக்குமான உறவு முன்னேற்றம் கண்டுள்ளது. இந்தியப் பாதுகாப்பு ஆலோசகருடன் நடத்திய பேச்சுவார்த்தையும் சுமுகமாக இருந்தது', என்றார்.

அமெரிக்காவில் காலிஸ்தான் பிரிவினைவாதி குர்பத்வந்த் சிங் பன்னுனைக் கொலை செய்யத் திட்டமிட்ட நிகில் குப்தா கைதுசெய்யப்பட்டது தொடர்பான கேள்விக்குப் பதிலளித்த தாமஸ், 'இரு சம்பவங்களுக்கும் தொடர்பு இருக்கலாம். அமெரிக்கா அளித்த தகவல் இந்தியா குறித்த கனாடவின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு அளிப்பதாக உள்ளது. இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் எங்களுடன் இணைந்து செயல்பட்டு வருகிறார். இந்தப் பிரச்சினையை தீர்க்கும் தருவாயில் உள்ளோம்', - என்றார்.

இது தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் தரப்பில் எவ்விதப் பதிலும் அளிக்கப்படவில்லை.

ஜோடி தாமஸ், கனடாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக கடந்த 2022 ஜனவரியில் நியமிக் கப்பட்டார். நிஜ்ஜார் கொலைக் குற்றச்சாட்டுத் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த இந்தியாவுக்கு பலமுறை அவர் பயணம் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (04)

# கல்லீரல் செயலிழப்புக்குள்ளாகிய சாந்தனுக்கு தொடர்ந்தும் தீவிர சிகிச்சையளிக்கப்படுகிறது

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று விடுதலையாகியும் தொடர்ந்து தடுப்புக் காவலில் இருந்த சாந்தன், கல்லீரல் செயலிழப்புக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றபோதிலும், அவரது உடல் நிலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏதும் இல்லை என்று சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று, வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த சாந்தன் 2022 இல் உச்சநீதிமன்ற அறிவுறுத்தலின் பேரில் விடுவிக்கப்பட்டார். அதன் பின்னர், அவர் திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இலங்கைத் தமிழரான சாந்தனுக்கு ஜனவரி 24 ஆம் திகதி உடல் நிலை பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர் திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

உயர் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்துவரப்பட்ட அவர், தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கல்லீரல் செயலிழப்புக்கு (சிரோஸிஸ்) உள்ளான சாந்தனுக்கு பல்வேறு உடல் நலப் பாதிப்புகள் ஏற்பட்டிருப்பதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இதயத் துடிப்பு, ரத்த அழுத்தம், சுவாச சுழற்சி உள்ளிட்டவை சீராக இருப்பதாகவும், அதேவேளையில் பிற பாதிப்புகளுக்கு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (04)

# மாலைதீவு நாடாளுமன்றில் கடும் மோதல் உறுப்பினர்கள் இருவர் காயமடைந்தனர்

மாலைதீவு நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி எம்.பி.க்களுக்கு இடையே நேற்று கடும் மோதல் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பரில் மாலைதீவு அதிபராக மூயிஸ் பதவியேற்றார். இவர் சீன ஆதரவாளராகக் கருதப்படுகிறார். இந்நிலையில், அந்நாட்டு நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அதிபர் மூயிஸ் அமைச்சரவையில் 4 பேரை அமைச்சர்களாக நியமிக்கும் பரிந்துரைக்கு நாடாளுமன்ற ஒப்புதல் பெற இந்தச் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. எனினும் அந்தப் பரிந்துரைக்கு பிரதான எதிர்க்கட்சிகளான மாலைதீவு ஜனநாயக கட்சி மற்றும் ஜனநாயகவாதிகள் கட்சியினர் ஒப்புதல் அளிக்கப் போவதில்லை என்று முடிவு செய்தனர்.

இதனால் ஆளும் கூட்டணியான அதிபர் மூயிஸின் தேசிய மக்கள் காங்கிரஸ் மற்றும் மாலைதீவு முற்போக்கு கட்சி எம்.பி.க்கள் அவைத் தலைவரின் இருக்கையை முற்றுகையிட்டனர்.

அப்போது மாலைதீவு ஜனநாயக கட்சி எம்.பி. அகமட், தேசிய மக்கள் காங்கிரஸ் எம்.பி. அப்துல்லா ஷாஹீம் ஆகியோருக்கு இடையே கடும் மோதல் ஏற்பட்டது. இதில் காயமடைந்த ஷாஹீம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்த மோதலின்போது மாலைதீவு ஜனநாயக கட்சி எம்.பி. ஹசன் ஜரீருக்கும் விரலில் பலத்த காயம் ஏற்பட்டது.



இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அந்நாட்டு நாடாளுமன்ற அவைத் தலைவர் முகமட் அஸ்லாம், துணைத் தலைவர் அகமட் சலீம் ஆகியோருக்கு எதிராக மாலைதீவு முற்போக்குக் கட்சி மற்றும் தேசிய மக்கள் காங்கிரஸ் கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளனர். (04)

# ரஷ்யாவுக்கு எதிரான போருக்கு எறிகணைக் கொள்முதல் உக்ரைனில் 40 மில்லியன் டொலர் ஊழல் நடைபெற்றது!



ரஷ்யாவுக்கு எதிரான போரில் பயன்படுத்துவதற்காக ஒரு லட்சம் எறிகணைக் குண்டுகள் வாங்கு வதில் உக்ரைனில் 40 மில்லியன் டொலர் வரை ஊழல் நடந்திருப்பதாக அந்த நாட்டு அரசின் பாதுகாப்புப் பணிமுகமை தெரிவித்துள்ளது.

உக்ரைன் ஆயுதத் தயாரிப்பு நிறுவன ஊழியர்கள் மற்றும் பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகளுக்கு ஊழலில் தொடர்புள்ளதாகத் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக 5 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் உக்ரைன் எல்லையைக் கடந்து தப்ப முயன்றபோது சனிக்கிழமை கைது செய்யப்பட்டார். குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு 12 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோ அமைப்பில் உறுப்பினராக உக்ரைன் சேரவிருக்கும் நிலையில் ஊழல் தொடர்பான விசாரணையை அந்நாடு துரிதப்படுத்தியுள்ளது. உறுப்பினராக சேர்க்கப்படுவதற்கு முன்னர் பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொள்ளுமாறு இரு அமைப்பினரும் உக்ரைனிடம் வலியுறுத்தியதையடுத்து இந்த நடவடிக்கையை உக்ரைன் மேற்கொண்டது.

இதுதொடர்பாக அந்நாட்டு ராணுவ அதிகாரிகள் மேலும் கூறுகையில், '2022, ஓகஸ்ட் மாதத்தில் 40 மில்லியன் டொலர் செலவில் 1 லட்சம் எறிகணைக் குண்டுகளை வாங்க 'லிவிவ் அர்சனல்' என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையொப்பமானது.

இதற்கான மொத்தத் தொகையும் நிறுவனத்துக்கு செலுத்தப்பட்டது. அதைப் பெற்றவுடன் வெளிநாட்டிலுள்ள நிறுவனத்தின் வணிகப் பிரிவுக்கு ஊழியர்கள் செலுத்தியிருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந்தால் ஒப்பந்தமிட்ட ஆயுதங்கள் உக்ரைனுக்கு வழங்கப்பட்டிருக்கும்.

ஆனால், நாட்டிலுள்ள பல்வேறு வங்கிக் கணக்குகளுக்கு ஒப்பந்தத் தொகை பிரித்து வழங்கப்பட்டுள்ளது. இதனால் நாங்கள் கோரிய ஆயுதங்கள் விநியோகிக்கப்படவில்லை. இதையடுத்து வங்கிக் கணக்கிலிருந்து பணம் கைப்பற்றப்பட்டு நாட்டின் பாதுகாப்பு நிதிக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது'. - என்றனர். (04)

# பெண் முயற்சியாளர்களின் திறமைகளை வெளிக் கொண்டுவரும் களமாக அருந்ததியின் "மாற்று மோதிரம்" நிகழ்வு அமையும்!




பெண் முயற்சியாளர்கள் தங்களின் திறமைகளை வெளக் கொண்டுவருவதற்கான ஒரு களமாக அருந்ததியின் "மாற்று மோதிரம்" நிகழ்வு அமையும் என அருந்ததி நிறுவனத்தின் பணிப்பாளர் கே.மேகலா தெரிவித்துள்ளார்.

அருந்ததி நிறுவனத்தின் மாற்று மோதிரம் நிகழ்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. அது குறித்து அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போதே அவ்வாறு தெரிவித்தார்.

மாற்று மோதிரம் நிகழ்வானது மணப்பெண் அலங்காரம் மற்றும் திருமண கண்காட்சி என்பவற்றுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதில், அழகு கலை நிபுணர்கள், ஆரி வேலைபாடுகள் கலைஞர்கள், கேக் தயாரிப்பாளர்கள், புகைப்பட கலைஞர்கள், விடியோ கலைஞர்கள், ஆடை வடிவமைப்பாளர்கள் என திருமண நிகழ்வுடன் தொடர்புடைய கலைஞர்கள் பங்கேற்கவுள்ளனர்.

பெண் முயற்சியாளர்கள் தங்களின் திறமைகளை வெளிக் கொண்டுவருவதற்கான ஒரு களமாக அந் நிகழ்வு அமையும்.

திருமண கண்காட்சிகளின்போது திருமணத்திற்கான அனைத்தும் வழங்குநர்கள் இவ்வாறான கண்காட்சியில் இணைவதன் மூலமாக அவர்களும் தம்மை வெளி உலகத்திற்கு வெளிப்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை குறித்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டிருந்த அழகுக்கலை நிபுணரான வித்தியா நிரஞ்சன் தெரிவிக்கையில் ,

பெண் சுயதொழில் முயற்சியாளர்கள் பலர் தற்போது உருவாகி வருகின்றனர். இவ்வாறான நிகழ்வுகள் அவர்களை மேலும் வளப்படுத்தும். அவர்களுக்கு இதுவொரு சிறந்த தளமாக அமையும், என்றார்.

இந்தச் சந்திப்பில் அழகுக்கலை நிபுணர்களான கோபிநாத், கயல்விழி ஜெயபிரகாஷ் மற்றும் வி.அனிதா ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கிழக்கின் முதல் குழந்தை நல மருத்துவப்பேராசிரியர் வைத்திய நிபுணர் திருமதி விஜயகுமாரி திருக்குமார்



(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளரும், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் விசேட குழந்தை நல வைத்திய நிபுணருமான டொக்டர் திருமதி விஜயகுமாரி திருக்குமார் கிழக்கின் முதல் குழந்தை நல மருத்துவப்பேராசிரியராகியிருக்கிறார்.

காரைதீவைச் சேர்ந்த வைத்திய கலாநிதி திருமதி விஜயகுமாரி திருக்குமார் கொழும்பு பல்கலைக்கழகம் லண்டன் றோயல் உயர் கல்லூரி என்பவற்றில் உயர் பட்டங்கள் பெற்றவர்.

MBBS, DCH,MD - FRCPCH என மருத்துவ சேவைப் பட்டங்கள் பல பெற்ற இவர், குழந்தை நலன் தொடர்பாக பல மருத்துவத் துறைக் கட்டுரைகளையும் எழுதி வருகிறார். கிழக்கில் முதலாவது குழந்தை நல மருத்துவப் பேராசிரியர் என்ற பெருமையையும் இவர் பெறுகிறார்.

இவரது துணைவர் வைத்திய கலாநிதி மார்க்கண்டு திருக்குமார் யாழ்.உரும்பிராயைச் சேர்ந்த மகப்பேற்று நிபுணராவார். அவரும் கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவத் துறைப் பேராசிரியராவார்.



# பாடசாலை சிரமதான நிகழ்வுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன

(எம்.ஏ.ஏ.அக்தார்)

கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலய பழைய மாணவரான எம்.எம்.ஹில்மி அன்பளிப்பு செய்திருந்த சிரமதானத்துக்கான உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு பழைய மாணவர் சங்கத்திளரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் யூ.எல்.ஹாஜா, சங்கத்தின் தலைவரும் பாடசாலை அதிபருமான எம்.எஸ்.எம்.பைஸால் அவர்களால் உபகரணங்கள் பொறுப்பேற்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# இறக்காமம் றோயல் கனிஷ்ட கல்லூரியில் "மகத்துவம்" மாண்புறு விழா நடைபெற்றது

(எம்.எம்.றம்ஸீன்)

இறக்காமம் றோயல் கனிஷ்ட கல்லூரியின் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் " மகத்துவம் " மாண்புறு விழா அண்மையில் கல்லூரி அதிபர் எம்.ஏ. எம். பஜீர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், தேசிய காங்கிரஸின் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகள் என பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.



# திருகோணமலையில் உழவர் திருநாள்



(ஹஸ்பர் ஏ.எச்)

உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையும், திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகமும் இணைந்து நடாத்திய "உழவர் திருநாள்" உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையின் இலங்கை கிளையின் தலைவர் சுந்தரம் சிவபாலன் தலைமையில் திருகோணமலை நகராட்சி மன்றக் கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை (27) நடைபெற்றது.

ஆன்மீக அருளுரையினை வேதாகம மாமணி. பிரம்ம ஸ்ரீ.சோ.ரவிச்சந்திரக் குருக்கள் வழங்கி வைத்தார். முதன்மை விருந்தினராக, உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையின் சர்வதேச தலைவர் த.மகிபாதேவனும், சிறப்பு விருந்தினராக திருகோணமலை நகராட்சி மன்றச்செயலாளர் வெ.இராஜசேகரும் கலந்து சிறப்பித்தனர்.

வரவேற்புரையினை நூலக உதவியாளர் அ. அச்சுதனும், வரவேற்பு நடனத்தினை ஈழத்துக் கலையரசி. திருமதி சிவ தர்ஷினியின் மாணவிகளும் வழங்கினர்.

உழவர் நடனத்தை திருகோணமலை பாரதி தமிழ் வித்தியாலய மாணவர்கள் வழங்க, அதிபர்.திருமதி.சுஜந்தினி நெறிப்படுத்தியிருந்தார்.

சிறப்புரையை கவிஞர்.தில்லைநாதன் பவித்திரன் நிகழ்த்தினார். பொங்கல் பாடலை ஓய்வுபெற்ற கலாசார உத்தியோகத்தர் மகேந்திரராசா வழங்கினார்.

நிகழ்ச்சித் தொகுப்பினையும், கல்லூரி மாணவர்களின் விவாத அரங்கினையும் கவிஞர் க.யோகானந்தன் தலைமையேற்று நெறிப்படுத்தினார். நகராட்சி மன்ற விநாயகர் ஆலயத்தில் சிறப்புப் பொங்கலும் இடம் பெற்றது.

## அட்டாளைச்சேனை "நம்மவரைக் கொண்டாடுவோம்" நிகழ்வில் ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர் ஐ.எம். ஹனீபாவுக்கு கௌரவம்

(எம்.எப்.நவாஸ்)

ஓய்வுபெற்ற அரசாங்க அதிபரும் முன்னாள் பிரதேச செயலாளருமான சம்மாந்துறையைச் சேர்ந்த ஐ.எம். ஹனீபா அவர்களின் நற்பணியைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று அட்டாளைச்சேனையில் இடம்பெற்றது

நாம் ஊடகர் பேரவை மற்றும் ருஹூணு லங்கா அமைப்பு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த "நம்மவரைக் கொண்டாடுவோம்" எனும் நிகழ்விலேயே இந்த கௌரவம் வழங்கப்பட்டது.

'நாம் ஊடகர் பேரவை'த் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் யூ.எல். மப்றூக் தலைமையில் அட்டாளைச்சனை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. சாபிர், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, பொத்துவில் பிரதேச செயலாளர் சட்டத்தரணி எம்.ஐ.எம். பிர்னாஸ், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எல்.எம். ஹனீஸ், அட்டாளைச்சேனை பிரசே உதவிச் செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர், ருஹூணு லங்கா தலைவரும் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருமான எம்.எஸ்எம். ஜவ்பர், 'நாம் ஊடகர் பேரவை' செயலாளர் றிசாத் ஏ காதர், அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசல் முன்னாள் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ். ஜூனைதீன் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, ஓய்வுபெற்ற அரசாங்க அதிபரும் முன்னாள் பிரதேச செயலாளருமான சம்மாந்துறையைச் சேர்ந்த ஐ.எம். ஹனீபா அவர்களின் நற்பணியைப் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிப்பு இடம்பெற்றது.








## புத்தளம் தில்லையடி அல் ஜிந்தா பாலப் புனரமைப்பு மீண்டும்



(கற்பிட்டி செய்தியாளர் சியாஜ்)

புத்தளம் தில்லையடியில் கடந்த இரண்டு வருடங்களாகத் தடைப்பட்டிருந்த அல் ஜிந்தா பாலத்தின் புனரமைப்பு வேலைகள் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம் இன் முயற்சியினால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம் வேண்டுகோளுக்கு இணங்க கடந்த 2021 ஆம் ஆண்டு இப்பாலத்தின் புனரமைப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக அது தடைப்பட்டிருந்தது.

இந்நிலையில், புத்தளம் தில்லையடி அல் ஜிந்தா பகுதி வாழ் பொது மக்கள் முன்வைத்த தொடர் கோரிக்கையை அடுத்து அல் ஜிந்தா பாலத்தின் புனரமைப்பு வேலைத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கான நிதியினை விடுவிக்குமாறு புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் கிராமிய வீதி மற்றும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுடன் தொடர்புகளை மேற்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார்.

இதனை அடுத்து அல் ஜிந்தா பாலத்தின் புனரமைப்பு வேலைத்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## ஏறாவூர், கோறளைப்பற்று பயனாளிகளுக்கு நிதியுதவி



(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஏறாவூர் மற்றும் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகங்களில் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையினால் வீடு மற்றும் மலசல கூடங்களை புனரமைப்பதற்கான நிதி உதவி வழங்கும் நிகழ்வுகள் ஏறாவூர் நகர சபை கேட்போர் கூடம் மற்றும் கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் சபா மண்டபம் ஆகியவற்றில் இடம்பெற்றன.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் வழிகாட்டலில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ஷெய்யித் அலிசாஹிர் மௌலானா தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் ஏறாவூர் நகர பிரதேச செயலாளர், சிரேஷ்ட சட்டத்தரணி ஹபீப் றிபான் உட்பட ஏறாவூர் மற்றும் ஓட்டமாவடி உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தவிசாளர்கள், முன்னாள் கௌரவ உறுப்பினர்கள், குறித்த உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், வீடமைப்பு அதிகார சபையின் அதிகாரிகள் ,பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர்கள் உட்பட ஊர் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.01.2024 இல் வெளியிடப்பெற்றது.